இன்றைய செய்தி நாளைய வரலாறு
முரசொலி
நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி
செவ்வாய்க்கிழமை 15.09.2026

# வெளிநாட்டு பொய்ப் பயணம்!

**வி**ஜய் முதலமைச்சர் ஆன உடன் முதலில் சரிந்தது தமிழ்நாட்டின் தொழில் வளர்ச்சிதான். எதுவும் தெரியாத, எந்த தொலைநோக்குச் சிந்தனையும் இல்லாத, சில புரோக்கர்களின் வலையத்தில் மட்டுமே வலம் வரும் விஜய் காலத்தில் முதலீடுகள் செய்தால் நம் நிறுவனமும் வளராது, இந்த மாநிலமும் வளராது என்பதை முதலில் அறிந்தவர்கள் தொழில் அதிபர்கள் தான்.

அதை விட முக்கியமாக தொழில் துறை அமைச்சராக ஒருவரை நியமித்துள்ளாரே விஜய்! அவரால் முதலீடும் கொண்டு வர முடியாது, அவரை நம்பி யாரும் முதலீடும் செய்ய மாட்டார்கள். இருக்கும் நிறுவனமும் தப்பித்து ஓடத்தான் பார்க்கும்.

இத்தகைய சூழலில் முதலீடுகளை ஈர்ப்பதற்காக முதலமைச்சர் விஜய் வெளிநாட்டுக்கு பயணம் மேற்கொண்டுள்ளாராம். நடிகர் சொன்னால் நாடும் நாட்டு மக்களும் எதையும் நம்புவார்கள் என்று நினைக்கும் விஜய், கோடிக்கணக்கான மக்கள் காதில் பூ சுற்றி விட்டுக் கிளம்பி இருக்கிறார்.

வெளிநாட்டில் முதலீடுகளை ஈர்ப்பதாக இருந்தால் அமைச்சர்கள், அதிகாரிகள் மட்டத்தில் பல முறை பேச்சுவார்த்தைகள் நடத்திய பிறகு முதலமைச்சரின் பயணம் திட்டமிடப்படும். ஆனால் இங்கு திடீரென முதலமைச்சர் மட்டுமே கிளம்பி விட்டார். லண்டன் விமான நிலையத்தில் போய் விஜய் நின்றால் முதலீடுகள் கொட்டிவிடும் என்று ரூட் மாஃபியா சொன்னதா எனத் தெரியவில்லை.

ஆனால் உண்மையான காரணத்தை நடிகர் அஜீத் உடைத்து விட்டார். 'நான் அழைத்து வந்துள்ளார். கார் ரேஸ் போட்டியில் எங்களைப் பார்ப்பதற்காக நான் அழைத்து முதலமைச்சர் விஜய் வந்திருப்பது மகிழ்ச்சியாக உள்ளது. மிக பிஸியான நேரத்திலும் கார் ரேஸைக் காண வந்த முதலமைச்சர் விஜய்க்கு எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்' என்று அஜீத் சொல்லி இருக்கிறார். விஜய் போனது சக நடிகரை ஐஸ் வைக்கத்தானே தவிர முதலீடுகளை ஈர்ப்பதற்காக அல்ல. விஜய் இங்கு பிஸியாக இல்லை. அவர் இங்கும் சூட்டிங்கில்தான் இருக்கிறார். அதன் தொடர்ச்சியாகத்தான் ரேஸ் பார்க்கச் சென்றுள்ளார். இதற்கு தொழில் முதலீடுகளை ஈர்க்க என எதற்கு பொய் சொல்ல வேண்டும்?

**தமிழ்நாட்டில் 2026ஆம் ஆண்டின் முதல் காலாண்டில் புதிய முதலீட்டு proposals (முதலீட்டுத் திட்டப் பரிந்துரைகள்) சுமார் 74.5 விழுக்காடு வரை சரிவைச் சந்தித்துள்ளதாக செய்திகள் கூறுகின்றன. தேசிய அளவில் முதலீடுகளை ஈர்ப்பதில் தமிழகத்தின் தரவரிசை 6வது இடத்தில் இருந்து 17வது இடத்திற்குப் பின் தள்ளப்பட்டுள்ளது என்றும் செய்திகள் வெளியாகி உள்ளது.**

**கர்நாடகா, கேரளா, மேற்கு வங்கம், தமிழ்நாடு ஆகிய மாநிலங்களில் புதிய முதலமைச்சர்கள் பதவியேற்றதைத் தொடர்ந்து, முதல் காலாண்டில் 4 மாநில தொழில் முதலீடுகளில் தமிழ்நாடு பின்னடைவை சந்தித்துள்ளதாகவும், மற்ற 3 மாநிலங்களில் முன்மொழியப்பட்ட முதலீடுகள் கணிசமாக அதிகரித்துள்ளதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது.**

**அனைத்து தொழில் நிறுவனங்களும் ஆந்திராவை நோக்கி படையெடுத்துக் கொண்டு இருக்கிறது. இந்த சூழலில் பரந்தூர் விமானநிலையத் திட்டத்தை எந்த தொலைநோக்குச் சிந்தனையும் இல்லாமல் தற்குறித்தனமாக ரத்து செய்துள்ளது த.வெ.க. அரசு. இதுவும் ஆந்திரா, கர்நாடகா, தெலங்கானா அரசுகளுக்கு மிகப்பெரிய நன்மையாக அமைந்துள்ளது.**

'விஜய் கர்நாடக, ஆந்திர, தெலங்கானா மாநில முதலமைச்சராகவும் செயல்படுகிறார்' என்று இணையத் தளத்தில் கிண்டல் அடிப்பது உண்மை தான்.

இதனை மறைக்க பல்வேறு பொய்கள் கட்டமைக்கப்படுகின்றன. அதில் ஒன்று முதலீட்டாளர் மாநாடு ஆகும். விஜய் முன்னிலையில் (ஆக.13) சென்னையில் நடைபெற்ற 'வெற்றி தமிழ்நாடு முதலீட்டாளர்கள் மாநாட்டில்' தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை சார்பில், 67,452 கோடி ரூபாய் முதலீடு மற்றும் 1,06,998 வேலை வாய்ப்பு உருவாக்கும் வகையில் 97 புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் மேற்கொள்ளப்பட்டதாக தொழில் துறை தெரிவித்துள்ளது.

'தமிழகத்தில் த.வெ.க. அரசு பொறுப்பேற்ற 100 நாட்களில் 1 லட்சம் கோடி ரூபாய்க்கும் மேற்பட்ட தொழில் முதலீடுகள் ஈர்க்கப்பட்டுள்ளன. இதன்மூலம் 1,21,788 நபர்களுக்கு வேலை வாய்ப்புகள் உறுதியளிக்கப்பட்டு உள்ளன' என்று விஜய் அரசு தெரிவித்துள்ளது. இவை எதுவும் உண்மை அல்ல.

இப்படி ஒரு முதலீட்டாளர் மாநாடு நடக்கும் போது ஊடகங்கள் எதுவும் அனுமதிக்கப்படவில்லை. 67 ஆயிரம் கோடி முதலீடு ஈர்க்கப்படுகிறது என்றால் டெல்லியில் இருந்தே அனைத்து ஊடகங்களையும் அழைத்து வந்து காட்டலாம். இதை விட தமிழ்நாட்டுக்குப் பெருமை இருக்க முடியாது. ஆனால் விஜய் என்ன செய்தார் என்றால் கேரவேனில் இருப்பதைப் போல முதலீடுகளை ரூமுக்குள் வைத்து ஈர்த்தார். ஈர்த்துக் குவித்து விட்டார்.

'இதுவே அமைச்சர் கீர்த்தனாவுக்காக செய்யப்பட்ட நாடகம்தான். அவரை துறை மாற்ற நினைத்தார் முதலமைச்சர். ஆனால் அவரை அந்த துறையில் இருக்க வைக்க கீர்த்தனாவுக்காக ஒரு குரூப் இப்படி ஒரு மாநாட்டை நடத்தியது' என்றும் த.வெ.க. வட்டாரங்கள் சொல்கின்றன.

அமைச்சர் கீர்த்தனா விஜயை ஏமாற்ற நினைத்தார் என்றால், ஒட்டு மொத்த தமிழ்நாட்டு மக்களையும் ஏமாற்ற விஜய் போட்ட திட்டம் தான் இந்த வெளிநாட்டு பொய்ப்பயணம்.

**அரிதாரம் பூசி நடிக்கலாம். அரிதாரம் பூசி ஆளக் கூடாது.**



தலைவர் கலைஞரின் உறவினரும் தஞ்சை தமிழ்ப் பல்கலைக்கழக ஓய்வு பெற்ற உதவிப் பொறியாளருமான தஞ்சாவூர் இளங்கோவன் (குரு) மகள் செல்வி அபிநயா – புகழேந்தி திருமண விழா தஞ்சாவூரில் நேற்று முன்தினம் நடைபெற்றது. இவ்விழாவில் திருமதி செல்வி செல்வம், திருமதி மோகனா தமிழரசு ஆகியோர் கலந்து கொண்டு மணமக்களை வாழ்த்தினர்.

## தட்டாஞ்சாவடி தொகுதி இடைத்தேர்தல்:

# தி.மு.க. வேட்பாளர் அறிமுகக் கூட்டம்!

## எஸ்.ஜெகத்ரட்சகன் எம்.பி. பங்கேற்பு!

புதுவை, செப். 15-

தட்டாஞ்சாவடி சட்டமன்றத் தொகுதி தி.மு.க. செயல்வீரர்கள் மற்றும் வேட்பாளர் அறிமுக கூட்டம் தட்டாஞ்சாவடி மார்க்கெட் கமிட்டி கூடத்தில் நேற்று முன்தினம் காலை நடைபெற்றது.

மாநில தி.மு.க. அமைப்பாளர், மேனாள் சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவர் இரா.சிவா தலைமை தாங்கினார். தட்டாஞ்சாவடி தொகுதி செயலாளர் ஆறுமுகம் வரவேற்று பேசினார்.





அவைத் தலைவர் எஸ்.பி. சிவக்குமார், மாநில துணை அமைப்பாளர் வி. அனிபால் கென்னடி, பொருளாளர் இரா. செந்தில்குமார், எம்.எல்.ஏ., மாநில இளைஞர் அணி அமைப்பாளர் எல். சம்பத், கழக சட்டமன்ற உறுப்பினர்கள் வே. கார்த்திகேயன், ஆ. ரமேஷ் (எ) செந்தில், விக்னேஷ் கண்ணன், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்கள் பூ. மூர்த்தி, நந்தா. டி. சரவணன், தொகுதி பொறுப்பாளரும், மாநில இளைஞர் அணி துணை அமைப்பாளருமான டாக்டர் நித்திஷ் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

தி.மு.க. தலைவர் மு.க. ஸ்டாலின், தமிழ்நாடு சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவர், இளைஞர் அணிச் செயலாளர் உதயநிதி ஸ்டாலின் ஆகியோரால் தட்டாஞ்சாவடி தொகுதி இடைத்தேர்தலுக்கு அறிவிக்கப்பட்ட தி.மு.க. வேட்பாளர் கு.சேது (எ) சேதுசெல்வம் அவர்களை புதுச்சேரி மாநில தி.மு.க. தேர்தல் பொறுப்பாளரும், தி.மு.க. கொள்கைப் பரப்புச் செயலாளருமான எஸ். ஜெகத்ரட்சகன் எம்.பி., அவர்கள் அறிமுகம் செய்து வைத்து, சிறப்புரை ஆற்றினார்.

இந்த கூட்டத்தில், மாநில துணை அமைப்பாளர்கள் ஏ.கே. குமார், அ. தைரியநாதன், தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள் கே.எம்.பி. லோகையன், டி.அருட்செல்வி, பொதுக்குழு உறுப்பினர்கள் சி.கோபால், வெ. ராமசாமி, ந.தங்கவேலு, பெ. வேலவன், எஸ்.தர்மராஜன், ஆர். கோகுல், டி.செந்தில்வேலன், பெ. பழநி, நா. கோபாலகிருஷ்ணன், எஸ்.அமுதாகுமார், தொகுதி செயலாளர்கள் இரா.சக்திவேல், கோ. தியாகராஜன், செ. நடராஜன், ஜி.பி. சவுரிராஜன், வ. சீத்தாராமன், எல். மணிகண்டன், ர. சிவக்குமார், ப. வடிவேல், பி.ஆர். ரவிச்சந்திரன், வெ. சக்திவேல், க ராஜாராமன், பி.சா.இளஞ்செழிய பாண்டியன், சே.ராதா கிருஷ்ணன், செ.சத்தியவேலு, அணிகளின் அமைப்பாளர்கள் மாணவர் அணி எஸ்.பி. மணிமாறன், தொ.மு.ச. அண்ணா அடைக்கலம், வழக்கறிஞர் அணி ச. ரிமஎம், மகளிர் அணி காயத்ரி ஸ்ரீகாந்த், மகளிர் தொண்டர் அணி சுமதி, தொண்டர் அணி வீரன் (எ) விரய்யன், விவசாய அணி வெ. குலசேகரன், வர்த்தகர் அணி சு. ரமணன், இலக்கிய அணி சீனு. மோகன்தாசு, மீனவர் அணி ந. கோதண்டபாணி, ஆதிதிராவிடர் நலக்குழு சி. ஆறுமுகம், நெசவாளர் அணி ந. செந்தில் முருகன், விளையாட்டு மேம்பாட்டு அணி ந. ரவிச்சந்திரன், சிறுபான்மையினர் நல உரிமைப் பிரிவு அ.முகம்மது ஹாலிது, தகவல் தொழில்நுட்ப அணி தாமோ. தமிழசரன், சுற்றுச்சூழல் அணி த. முகிலன், அயலக அணி அ. ஷாஜகான், அணித் தலைவர்கள் வழக்கறிஞர் அணி ச. லோககணேசன், வர்த்தகர் அணி க. செல்வமுத்து குமார விநாயகம், தொமுச பொ. அங்காளன், துணைத் தலைவர்கள் வர்த்தகர் அணி இரா. குரு (எ) சண்முகசுந்தரம், மகளிர் அணி வெ.பிரியதர்ஷினி, மகளிர் தொண்டர் அணி ரா.விஜயலட்சுமி, கலை, இலக்கிய பகுத்தறிவுப் பேரவை ஜே.ஆர்.ராஜேஷ் (எ) சேவியர் ராஜேஷ், வீ. ராமகிருஷ்ணன், துணை அமைப்பாளர்கள் இளைஞர் அணி வீ.தமிழ்ப்பிரியன், ம.ரெமி எட்வின், தே. தாமரைக்கண்ணன், பா, கிருபாசங்கர், ப. பஜுலுதீன், மாணவர் அணி ந. கண்ணன், மகளிர் அணி நல்கணா, விஜயகுமாரி, ஆதிதிராவிடர் அணி தேவேந்திரன், அன்பழகன், தகவல் தொழில்நுட்ப அணி சிவதாசன் உள்ளிட்ட பலரும் பங்கேற்றனர்.

கூட்ட முடிவில் தட்டாஞ்சாவடி தொகுதி அவைத்தலைவர் கணேசன் நன்றி கூறினார்.

## மதுராந்தகம் தொகுதி கழக வேட்பாளர்

# வழக்கறிஞர் இ.பரந்தாமன் தீவிரப் பிரச்சாரம்!

## 51 ஊராட்சிகளைச் சேர்ந்த கிளைச் செயலாளர்கள் – நிர்வாகிகளை சந்தித்தார்!

மதுராந்தகம், செப். 15-

மதுராந்தகம் சட்டமன்றத் தொகுதி இடைத்தேர்தல் கழக வேட்பாளரும் கழகச் சட்டத் துறை இணைச் செயலாளருமான வழக்கறிஞர் இ.பரந்தாமன், காஞ்சிபுரம் தெற்கு மாவட்டச் செயலாளர் க.சுந்தர் ஆலோசனையின்படி அத்தொகுதியிலுள்ள அச்சரப்பாக்கம் ஒன்றியத்திற்கு உட்பட்ட 51 ஊராட்சிகளைச் சேர்ந்த கழகக் கிளைச் செயலாளர்கள் மற்றும் நிர்வாகிகளை நேரில் சந்தித்தார்.



இச்சந்திப்பின்போது காஞ்சிபுரம் நாடாளுமன்ற உறுப்பினர் ஜி.செல்வம், மாநில இளைஞர் அணி துணைச் செயலாளர் அப்துல் மாலிக், செய்யூர் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் பனையூர் பாபு, அச்சரப்பாக்கம் தெற்கு ஒன்றியச் செயலாளர் ஓரதிக் கண்ணன், அச்சரப்பாக்கம் மத்திய ஒன்றியச் செயலாளர் கோகுலக்கண்ணன், வடக்கு ஒன்றிய செயலாளர் தம்பு ஆகியோர் உடனிருந்தனர்.

கழக வேட்பாளர் வழக்கறிஞர் இ.பரந்தாமன், அச்சரப்பாக்கம் தெற்கு ஒன்றியம் ஓரதி கண்ணன் முன்னிலையில் அவ்வொன்றியத்திற்கு உட்பட்ட பள்ளிப்பேட்டை, நேமம் அத்திவாக்கம், காட்டுக் கூடலூர், கடமலைப்புத்தூர், எடையாளம், மின்னல் சித்தாமூர், நெடுங்கல், கொடுங்கரை மாம்பட்டு, களத்தூர், கீழ் அத்திவாக்கம், பொரகால், அன்னங்கால் கூனங்கரணை, ஓரத்தி, வடமணிபாக்கம், விண்ணம்பூண்டி, திண்ணலூர், அனந்தமங்கலம், சிறுதாமூர், முருங்கை, கரசங்கால், வெளியம்பாக்கம், தொழுப்பேடு, ஆத்தூர் ஆகிய 23 ஊராட்சிகளிலும்;

அச்சரப்பாக்கம் மத்திய ஒன்றியச் செயலாளர் கோகுலக்கண்ணன் முன்னிலையில் பெரும்பேர் கண்டிகை, சீதாபுரம், திருமுக்காடு, திம்மாவரம், விலவங்காடு, மதுர், காட்டுக்கரணை, பாதிரி, வேலாமூர், மோகல்வாடி, எலப்பாக்கம், ஆனைக்குன்றம், பொற்பரங்கரனை, பாபுராயன் பேட்டை, சிறுபேர்பாண்டி ஆகிய 15 ஊராட்சிகளிலும்;

அச்சரப்பாக்கம் வடக்கு ஒன்றியச் செயலாளர் தம்பு முன்னிலையில் கீழாமூர், செம்பூண்டி, கிளியாநகர், எல். எண்டத்தூர், கடம்பூர், பெரும்பாக்கம், கோழியாளம், தீட்டாலம், பாப்பநல்லூர், வெள்ளபுத்தூர், ஒரத்தூர், கரிக்கிலி, வேடந்தாங்கல் ஆகிய 13 ஊராட்சிகளிலும், ஆக அச்சரப்பாக்கம் ஒன்றியத்திற்கு உட்பட்ட 51 ஊராட்சிகளிலும் கழகத்தின் கிளைச்செயலாளர்கள் மற்றும் நிர்வாகிகளை நேரில் சந்தித்தார்.

## மின் துறைக்கு இழப்பை ஏற்படுத்திய அதானி மீது நடவடிக்கை எடுக்க

# வெத்துவேட்டு விஜய் Gangக்கு தைரியம் இருக்கிறதா?

## சட்டப் பேரவை முன்னாள் தலைவர் மு.அப்பாவு கேள்வி!

*நெல்லை, செப்.15-*

*சட்டப்பேரவை முன்னாள் தலைவர் மு.அப்பாவு தனது எக்ஸ் வலைதளப் பதிவில் கூறியிருப்பதாவது:-*

*"மிசா" காலத்தில் முன்னாள் முதல்வர் மு. க. ஸ்டாலின் அவர்கள் கைது செய்யப்பட்டு ஓராண்டுக்கு மேல் சிறையில் கடுமையாக துன்புறுத்தப்பட்ட கொடுமையை மூடி மறைக்க அவர் மிசாவில் கைது செய்யப்படவில்லை, பிற குற்ற வழக்குகளில் கைது செய்யப்பட்டார் என்று சொல்லும் அரைவேக்காடு முதல் வரையும் சட்ட (சங்கி) அமைச்சரையும் வன்மையாக கண்டிக்கிறேன்.*

*"மிசா" அல்லாத வழக்கில் ஒருவரை கைது செய்ய வேண்டும் என்றால் காவல் நிலையத்தில் வழக்கு பதிவு செய்து நீதியரசர் முன் ஆஜர் செய்த பின் நீதியரசர் விடுவிக்கலாம், ஜாமீன் வழங்கலாம் அல்லது நீதிமன்ற சிறை காவலுக்கு அனுப்பலாம் ஆனால் மேற்படி நடைமுறை எதுவும் இல்லாமல் நேரடியாக கைது செய்து சிறையில் அடைப்பது தான் "மிசா சட்டம்" இந்த அடிப்படை சட்ட அறிவு கூட இல்லாத முதல்வர், சட்ட அமைச்சரை நினைத்து தமிழகமே வெட்கித் தலைகுனிகிறது.*

*அரசு பணத்தை தொட மாட்டேன், தொட விட மாட்டேன், தொட்டவர்களையும் விடமாட்டேன் என்று பூச்சாண்டி காட்டும் முதல்வரே, அ.தி.மு.க ஆட்சி காலத்தில் தமிழ்நாடு மின்வாரியத்துடன் 7 எரிதிறன் கொண்ட நிலக்கரி சப்ளை செய்வதற்கு அதானி நிறுவனம் ஒப்பந்தம் செய்துவிட்டு 4 முதல் 5 எரிதிறன் உள்ள நிலக்கரி சப்ளை செய்ததில் சுமார் 826 கோடி ரூபாய் மின்வாரியத்திற்கு இழப்பு ஏற்பட்டதாக இந்திய தலைமை கணக்கு தணிக்கையகத்தின் கீழ் சென்னையில் இயங்கு வரும் "ஆடிட் ஜெனரல்" குற்றம் சாட்டியுள்ளது. முதல்வரே, மின்துறை அமைச்சரே மின் துறைக்கு இந்த இழப்பை ஏற்படுத்திய பாரதப் பிரதமர் மோடியின் நண்பர் அதானி மீது நடவடிக்கை எடுக்க "விஜய் Gang க்கு தைரியம் இருக்கிறதா? அல்லது வழக்கம் போல் வெத்து வேட்டு "விஜய் Gang" தானா?*



*இவ்வாறு அவர் தனது எக்ஸ் வலைதள பதிவில் கூறியுள்ளார்.*